**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 252 of 2018**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : நல்லசாமி** | **Father/Husband's Name:இரத்தினசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.01.2025**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கல்துறையில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 9 வருடங்களுக்கு முன்பு தேதி , மாதம் ஞாபகமில்லை கல்துறை பஸ்ஸ்டாப்பில் உள்ள டீ கடையினுள் நின்று டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது திடிரென சத்தம் கேட்டதால் டீ கடையில் இருந்தவர்கள் சென்று பார்த்தார்கள் நானும் அவர்களுடன் சென்று பார்த்த போது தெற்கிலிருந்து வடக்காக பழனி – தாராபுரம் ரோட்டில் கல்துறை பஸ்ஸ்டாப்பில் நான்கு சக்கர வாகனமாக தோஸ்த் வாகனமும் , வடக்கிலிருந்து தெற்காக பழனி – தாராபுரம் ரோட்டில் வந்த யுனிகார்ன் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த வாகனத்தின் மீது நான்கு சக்கர வாகனம் மோதி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் . இரு சக்கரவாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த நபருக்கு வலது கால் , கை , தாடையில் அடிபட்டது. பின்னர் 108 ஆம்புலன்சுக்கு சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்திற்கு காரணம் யார் என்று எனக்கு தெரியவில்லை. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை சத்தம் கேட்டு சென்று தான் பார்த்தேன். எதிரியை எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் நான்கு சக்கர வாகனமாக தோஸ்த்தை ஓட்டி வந்த நபரை பார்க்கவில்லை அவர் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார். காயம்பட்டவரின் பெயர் கேட்டுத் தெரிந்து கொண்டேன் தற்போது எனக்கு ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. விபத்து நடந்த போது நான் டீ கடையில் உள்ளே இருந்தேன் சத்தம் கேட்டு சென்று தான் நான் பார்த்தேன். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே சுமார் 10 நபர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். விபத்து நடந்த விதம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.**

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2025.01.03 14:12:23 +0530

**நீதித்துறை நடுவர்**

**பழனி**